தினமலர் 30 DEC 2023

# நீங்களும் தொழில் முனைவோராகலாம் ஆதிதிராவிடர்களை அழைக்கிறது அரசு

**கோவை, டிச. 30–**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கு, சென்னையில் வரும் ஜன., 26, 27ல் நடைபெறுகிறது. இதுதொடர்பான விளக்க கூட்டம், கோவையில் நேற்று நடந்தது.

தாட்கோ மாநில திட்ட மேலாளர் வசந்தி வரவேற்றார். கலெக்டர் கிராந்திகுமார் தலைமை வகித்தார். தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழக தலைவர் மதிவாணன், தாட்கோ மேலாண் இயக்குனர் கந்தசாமி முன்னிலை வகித்தனர்.

விழாவில், தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி பேசியதாவது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்காகவே இத்துறை உருவாக்கப்பட்டது. தாட்கோ மூலமாக வேலைவாய்ப்பு, திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.




சென்னையில் நடத்தப்படும் தொழில் முனைவோர் கண்காட்சி குறித்த விழிப்புணர்வு வாகன பிரசார இயக்கத்தை, ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கயல்விழி துவக்கி வைத்தார். அருகில், கலெக்டர் கிராந்திகுமார், தாட்கோ தலைவர் மதிவாணன் உள்ளிட்டோர்.

சென்னையில் நடக்கும் தொழில் முனைவோருக்கான கண்காட்சியில், 350 அரங்குகள் அமைக்கப்படும். 5,000க்கும் மேற்பட்ட உற்பத்தி பொருட்கள் பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்படும்.

சுய தொழில் துவங்க, மத்திய – மாநில அரசுகள் வழங்கும் மானியத்துடன் கூடிய வங்கி கடன் பெறுவது தொடர்பாக விளக்கப்படும். தொழில்முனைவோர் தங்களை உயர்த்திக் கொள்வது தொடர்பான விபரங்களை, அறிய இக்கண்காட்சி உதவும். வேலைவாய்ப்பு கிடைக்காதவர்கள், தொழில்முனைவோராகி, பொருளாதாரத்தில் முன்னேறலாம். புதிய தொழில் துவங்க ரூ.1.50 கோடி வரை மானியம் வழங்கப்படுகிறது.

பழங்குடியின மக்கள் அதிக பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள்; எவ்வாறு சந்தைப்படுத்துவது என்பது குறித்த விழிப்புணர்வு இல்லை. வழிகாட்டுதல் வழங்கி, உற்பத்தி பொருட்களை ஒருங்கிணைத்து, நல்ல விலைக்கு விற்க முடியும். கண்காட்சி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்துக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இவ்வாறு, அமைச்சர் கயல்விழி பேசினார்.

கூட்டத்தில், தூய்மை பணியாளர் நல வாரிய துணை தலைவர் கனிமொழி, 'டிக்கி' தலைவர் தினேஷ் சங்கர், கொடிசியா செயலாளர் சசிகுமார், சி.ஆர்.ஐ., தலைவர் நவநீத சிவக்குமார், நரிக்குறவர் சங்க தலைவர் சுப்ரமணியன் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினமணி 30 DEC 2023

# ஆதிதிராவிடர் தொழில்முனைவோருக்கான கண்காட்சி குறித்த ஆலோசனைக் கூட்டம்




கண்காட்சி, கருத்தரங்கம் தொடர்பான விழிப்புணர்வு வாகனத்தை தொடங்கிவைக்கிறார் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ். உடன், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி உள்ளிட்டோர்.

**கோவை, டிச. 29:** ஆதிதிராவிடர், பழங்குடியினர் தொழில்முனைவோருக்கான கண்காட்சி, கருத்தரங்கம் சென்னையில் நடைபெறுவது தொடர்பான முன்னெடுப்பு நிகழ்ச்சி கோவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமை வகித்து கண்காட்சி, கருத்தரங்கம் தொடர்பான விழிப்புணர்வு வாகனத்தை தொடங்கிவைத்தார்.

பின்னர், அவர் பேசியதாவது: ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் ஆதிதிராவிடர், பழங்குடியின தொழில்முனைவோருக்கான கண்காட்சி, கருத்தரங்கம் சென்னை வர்த்தக மையத்தில் ஜனவரி 26, 27-ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது.

இக்கண்காட்சியில் 350 அரங்குகளில் ஆதிதிராவிடர், பழங்குடியின தொழில்முனைவோரால் உற்பத்தி செய்யப்பட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட உள்ளன.

தமிழக அரசின் மூலம் சுய தொழில் தொடங்குவதற்கும், மத்திய, மாநில அரசுகள் வழங்கும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் அரங்குகள் அமைக்கப்பட உள்ளன.

தொழில்முனைவோர் எந்த விதமான பிரச்னைகளை சந்திக்கிறார்கள். அவற்றை எப்படி தீர்ப்பது, தன்னைத்தானே உயர்த்திக் கொள்வது என்பது தொடர்பான விவரங்களை அறிந்துகொள்ள இந்த கண்காட்சி பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

கூட்டத்தில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி, மேம்பாட்டு கழகத் தலைவர் உ.மதிவாணன், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய துணைத் தலைவர் கனிமொழி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்து தமிழ் 31 DEC 2023




↑ சென்னையில் நடைபெற உள்ள தொழில்முனைவோருக்கான கண்காட்சி குறித்த விழிப்புணர்வு வாகனத்தை கோவையில் தொடங்கி வைத்த அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ். அருகில் மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி உள்ளிட்டோர்.

# தொழில் முனைவோர் கண்காட்சி விழிப்புணர்வு வாகன பிரச்சாரம்

● கோவை

சென்னையில் நடைபெற உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில்முனைவோருக்கான கண்காட்சி குறித்த விழிப்புணர்வு வாகன பிரச்சார தொடக்க விழா கோவையில் நடைபெற்றது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமை வகித்து, பிரச்சார வாகனத்தை தொடங்கி வைத்து பேசியதாவது:

முதல்வர் வழிகாட்டுதலின்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்த தொழில்முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் சென்னை வர்த்தக மையத்தில் வரும் ஜனவரி 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில் 350 அரங்குகளில் தொழில் முனைவோரால் உற்பத்தி செய்யப்பட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்கள், பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட உள்ளன.

சுயதொழில் தொடங்குவதற்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் புதிய தொழில் தொடங்குவதற்கான வழிகாட்டுதல் வழங்கப்படும்.

முதல்வர் கொண்டு வந்துள்ள அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் புதிய தொழில் தொடங்க ரூ.1.50 கோடி வரை மானியம் வழங்கப்படுகிறது. பட்டியலின பழங்குடியினர் தொழில்முனைவோர் நிதியின் கீழ் எந்த அடமானமும் இல்லாமல் மானியத்துடன் கடனுதவி வழங்கப்படுகிறது. இக்கண்காட்சியை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்த தொழில்முனைவோர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மக்கள் குரல் 30 DEC 2023




கோவை மாவட்டம், அவினாசி சாலை கிராண்ட் ரீஜென்ட் ஓட்டலில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம், ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தென்னிந்திய அளவிலான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோர்களுக்கான பிரத்யேக கண்காட்சிக்கான ஆயத்த கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் விழிப்புணர்வு வாகனத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். அருகில், தாட்கோ தலைவர் மதிவாணன், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, கலெக்டர் கிராந்திகுமார் பாடி, தாட்கோ மாநில தூய்மை பணியாளர் நல வாரிய துணைத்தலைவர் கனிமொழி, மாநில் திட்ட மேலாளர் வசந்தி குமரேசன் ஆகியோர் உள்ளனர்.